உடனடி வெளியீட்டுக்காக

# கோவிட்-19 [COVID-19] க்கு எதிராக ப்ராம்ப்ட்டன் மாநகரின் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 11, 2020) – ப்ராம்ப்ட்டன் மாகர நிர்வாகமானது பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) மற்றும் பிற சமூகத்தினர் மற்றும் GTHA பங்காளிகளுடன் இணைந்து கோவிட் -19 (கொரோனா வைரஸ்) [COVID-19 (Coronavirus) பரவாமல் தடுத்து, குடியிருப்புவாசிகளைக் காக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கோவிட் -19 (COVID-19) வைரஸானது சுவாசித்தல் ரீதியான நோய்த்தன்மையை உண்டாக்கி, மனிதருக்கு மனிதர் பரவக்கூடியது. இதற்கான அடையாளங்களில் மிதமானது முதல் கடுமையானது வரையிலானவையாகும் மற்றும் பொதுவாகவே, இதில் காய்ச்சல், இருமல் மற்றும் சுவாசக்குறைபாடு ஆகியவை அடங்கும்..

எந்த ஒரு நோய்த்தன்மையையும் போலவே, உடல் நலமில்லாதபோது, மக்கள் வீட்டிலேயே இருக்கும்படியும், நோய் கொண்ட மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்த்தபடியும் இருப்பது சாலச் சிறந்தது. தயவு செய்து கைகளை வழக்கமாகவே கழுவுங்கள் மற்றும் இருமும்போதும் தும்மும்போதும் முகத்தை மூடிக்கொள்ளுகள்.

மாநகர நிர்வாகமானது பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இன் அறிவுறுத்தல் மற்றும் ஆலோசனைகளைப் பின்பற்றுகிறது. பீல் பகுதியில் தற்போதைய ஆபத்து குறைவாகவே இருப்பினும், நமது நமூகத்தின் சுகாதாரத்தைக் காக்க பின்வரும் நடவடிக்கைகளை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் மேற்கொண்டிருக்கிறது. :

- **ப்ராம்ப்ட்டன் நகரின் இடையில் போக்குவரத்து** – பேருந்துகளின் மேற்பரப்பு மற்றும்இருக்கைகள், வசதியமைப்புக்கள் மற்றும் பேருந்து முனையங்கள் ஆகிய இடங்களில், தூய்மைப்படுத்தல் மற்றும் கிருமிநாசினி தெளித்தல் ஆகியவை அடிக்கடி செய்யப்படுகின்றன.
- **நிகழ்ச்சிகள் அமைத்தல்** – மாநகரம் செய்துவரும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிட்டபடியே நடைபெறுகின்றன. வெளியிலிருந்து நிகழ்ச்சிகள் நடத்த வருபவர்களுக்கான ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வு நெறிமுறைகள் வேறாக இருக்கலாம், மற்றும் இதன் விளைவாக சில நிகழ்வுகள் ரத்து செய்யப்படலாம்.
- **வசதியமைப்புகள்** – வசதியமைப்புகள் மற்றும் பொதுமக்கள் உபயோகிக்கும் சாளரங்களை தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளிப்பது அடிக்கடி செய்யப்படுகின்றது. கைகழுவதலை

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

குறிக்கின்ற படங்கள் கழிப்பிடங்களில் ஒட்டப்பட்டுள்ளன, மற்றும் கைகளைச் சுகாதாரமாக்கும் நிலையங்கள் அனைத்து வசதியமைப்புக்களின் நுழைவாயில்களிலும் கழிப்பறைகளிலும் அமைக்கப்பட்டுள்ளன.

குடியிருப்பு வாசிகளுக்கு தினசரி மற்றும் அவசர கால பொருட்களின் சேவைகள் கிடைக்கப்பெறச் செய்வதற்காக, நகரின் அனைத்து துறைகளுக்கும் ஆதரவளிக்கும் வகையில் அனைத்தும் அடங்கிய, தொடர்ந்து பணி செய்யும் திட்டம் ஒன்றை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் தன் வசம் கொண்டுள்ளது. கோவிட் -19 [COVID-19] இன் தாக்கத்தைக் குறைக்கவும் எதிர்கொள்ள தயாராகவும் இருப்பதற்காக, நகரின் பணியில் பங்குபெறுபவர்கள், ஒன்ட்டேரியோ ஃபயர் மார்ஷல் மற்றும் அவசரகால பணி செய்பவர்கள் ஆகியோருடன் தொடர்பில் இருந்து பணியாற்றுவதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர தீத்தடுப்பு மற்றும் அவசர கால சேவை அமைப்பானது தனிஒரு உள்ளக குழுவை உருவாக்கியுள்ளது.

கோவிட் -19 [COVID-19] பற்றிய புதுப் புது தகவல்களுக்கு வருகை புரியவும் www.peelregion.ca/coronavirus மற்றும் @RegionofPeel ஐப் பின்பற்றவும் .

**மேலும் தகவல்களுக்கு:**

- பீல் பொதுமக்கள் சுகாதாரம் புதிய கொரோனா வைரஸ் (கோவிட்-19) Peel Public Health – Novel Coronavirus (COVID-19)
- ஒன்ட்டேரியோ பிரதேசம்: சுகாதார அமைச்சகம் – புதிய கொரோனா வைரஸ் (கோவிட்-19) Province of Ontario: Ministry of Health – Novel Coronavirus (COVID-19)
- கனடா நாட்டு அரசாங்கம் – கொரோனாவைரஸ் (கோவிட் -19) புது தகவல் Government of Canada – Coronavirus (COVID-19) Update
- உலக சுகாதார நிறுவனம் கொரோனாவைரஸ் (கோவிட் -19) புது தகவல் World Health Organization – Coronavirus (COVID-19) Update

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் மாநகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca